((address_line_1))
((address_line_2))
((address_line_3))
((address_line_4))
((address_line_5))
((address_line_6))
((address_line_7))

**தேதி:** ((date))
**என்எச்எஸ் எண்:** ((nhsNumber))

**ஒரு என்எச்எஸ் வசந்த கால கொவிட்-19 தடுப்பூசிக்குப் பதிவுசெய்தல்**

அன்புக்குரிய ((fullName)),

ஒரு இலவசமான என்எச்எஸ் வசந்த கால கொவிட்-19 தடுப்பூசிக்கு நீங்கள் பதிவுசெய்ய முடியும். இதற்கான காரணம், ஒரு பலவீனமடைந்த நோய் எதிர்ப்பு சக்தி முறை உங்களுக்கு **இருக்கக்கூடும்** என உங்கள் என்எச்எஸ் பதிவேடு தெரிவிக்கின்றது. தடுப்பூசியை நீங்கள் பெறுவதற்கு முன்பாக, நாங்கள் இதை உறுதிசெய்ய வேண்டும்.

**ஒரு நியமனத்தை எவ்வாறு பெறுவது**

- **NHS App** என்பதில் அல்லது **www.nhs.uk/book-covid** என்பதில் **கணினி** மூலமாகப் பதிவுசெய்யவும்.
- ஒரு நியமனமின்றி வந்துசெல்லும் கொவிட்-19 தடுப்பூசி இடத்தை **www.nhs.uk/covid-walk-in** இல் கண்டுகொள்ளவும்

**2025 ஜூன் 17**க்கு முன்னர் நீங்கள் பதிவுசெய்ய வேண்டும். உங்கள் தடுப்பூசியைப் பெறுவதற்கான இறுதித் தேதி இதுவாகும்.

**உங்களுக்கு ஆதரவு தேவைப்பட்டால்**

உங்களால் கணினியைப் பெறுவதற்கு முடியாவிட்டால், 119 எண்ணை அழைக்கவும். மொழிபெயர்ப்பாளர்கள் இருக்கிறார்கள். ரெக்ஸ்ட் தொலைபேசி 18001 119 என்பதையும் அல்லது **www.signvideo.co.uk/nhs119** இல் என்எச்எஸ் பிரித்தானிய சைகை மொழி (BSL) சேவையையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

உங்கள் பராமரிப்பை நீங்கள் வீட்டில் பெறுவதாக இருந்தால், ஒரு **வீட்டுக்கு வருதலைப்** பெறுவதற்காக, உங்கள் குடும்ப மருத்துவரின் சிகிச்சை இடத்தைத் தொடர்புகொள்ளவும். அதை அவர்களால் ஏற்பாடு செய்ய முடியாவிட்டால், **www.england.nhs.uk/covid-vaccination-contacts** என்பதில் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும்.

இந்த அழைப்பு வேறு வடிவங்களிலும் உள்ளது. ஈசி றீட் , ஒலி வடிவம், BSL மற்றும் மொழிபெயர்ப்புகளில் பெறுவதற்கு, **www.england.nhs.uk/seasonal-invites** என்பதற்குச் செல்லவும்.

**எதற்காக என்எச்எஸ் வசந்த கால கொவிட்-19 தடுப்பூசியை வழங்குகின்றது**

கொவிட்-19 நோய் தொற்றுதல்கள் வருடம் பூராவும் இடம்பெறுகின்றன, மற்றும் அவற்றைத் தவிர்ப்பது கடினமாகும். உங்கள் நோய் எதிர்ப்பு பாதுகாப்பு காலப்போக்கில் பலவீனமடைவதாலும் இந்த வியாதியில் மாறுபாடுகள் ஏற்படலாம் என்பதாலும் உங்களுக்கான நோய் எதிர்ப்பு பாதுகாப்பு முறையை அதிகரித்தல் முக்கியமானது.

பலவீனமடைந்த நோய் எதிர்ப்பு சக்தி முறைகளைக் கொண்டுள்ளோர் கொவிட்-19 மூலமாகப் பாரதூரமாகச் சுகவீனமடையும் ஆபத்தில் உள்ளனர். வசந்தகால கொவிட்-19 தடுப்பூசியைப் பெறுதல் பாரதூரமான நோய்க் குறிகள் குறித்த உங்கள் ஆபத்தைக் குறைக்கும். **www.nhs.uk/covidvaccination** இல் நீங்கள் அதிகளவில் வாசிக்கலாம்.

**ஒரு பலவீனமடைந்த நோய் எதிர்ப்பு சக்தி முறை உங்களுக்கு உள்ளதா எனச் சரிபார்த்துக்கொள்ளவும்**

பின்வருவன இருந்தால், ஒரு பலவீனமடைந்த நோய் எதிர்ப்பு சக்தி முறை உங்களுக்கு **இருக்கக்கூடும்:** உங்களுக்கு

- இரத்த புற்றுநோய் (லுக்குமியா, லிம்வொம அல்லது மெயிலொம) இருக்கின்றது அல்லது இருந்தது
- ஒரு உறுப்பு, போண் மறோ அல்லது ஸ்டெம் செல் மாற்று அறுவைச் சிகிச்சை இருந்தது
- எச்ஐவீ உள்ளது
- உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி முறையைப் பாதிக்கும் ஒரு மரபணு ஒழுங்கீனம் உள்ளது
- கிமொதெரபி, பயலொசிகல்தெரபி அல்லது றெடியொதெரபியை நீங்கள் பெறுகிறீர்கள் அல்லது அண்மையில் பெற்றுள்ளீர்கள்

- உங்கள் மருந்து அளவைப் பொறுத்து, நீங்கள் ஊக்க மருந்துகளை எடுக்கிறீர்கள்
- நோய் எதிர்பு சக்தி குறைவு தொடர்பான சிகிச்சையைப் பெறுகிறீர்கள்.

இந்தப் பட்டியல் ஒரு சுருக்கமாகும், மற்றும் இது அனைத்தையும் உள்ளடக்கவில்லை. உங்களுக்குத் தெரியாவிட்டால், ஒரு மருந்தாளருடன், குடும்ப வைத்தியர் சிகிச்சை இடத்துடன் அல்லது ஒரு சிறப்பறிவாளருடன் பேசவும்.

உங்கள் உண்மையுள்ள,

என்எச்எஸ் இங்கிலாந்து தடுப்பூசி குழு (NHS England Vaccination Team)

தரவு பாதுகாத்தல்: உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் செயல்முறைப்படுத்துவதற்கான பொறுப்பு என்எச்எஸ் இங்கிலாந்து என்பதற்கு உள்ளது. இது தேசிய தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பதன் நோக்கத்துக்கானது. அதிகளவில் கண்டுகொள்வதற்கு, எங்கள் தனியுரிமை பற்றிய அறிவித்தலை **www.england.nhs.uk/contact-us/privacy-notice இல் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த அழைப்புப் பற்றி உங்களிடம் ஒரு கேள்வி இருந்தால், www.england.nhs.uk/invite-enquiry** என்பதற்குச் செல்லவும். விலகுதலுக்கு: **www.nhs.uk/covid-invite-preferences**.